Registered as a Newspaper

KEEN CENTRE
88 பஸாலி ரோட்,
திருநெல்வேலி.
89 A/L
– விஞ்ஞானம் –
தூய கணிதம் - திரு, நல்லையர்
பிரயோக கணிதம் - திரு, ஈசன்
பௌதிகம் - திரு, மணியம்
திரு, சத்தியசீலன்
இரசாயனவியல் - யாழ் பிரபல ஆசிரியர்
தாவரவியல் - திரு, சர்வானந்தா
விலங்கியல் - திரு, நாகநாதன்
ஆரம்பம்: 4-4-87
சனி 4-00 மணி (1165)

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

KEEN CENTRE
88, பஸாலி ரோட்,
திருநெல்வேலி.
89A/L கலை, வர்த்தகம்
பொருளியல் - திரு, வரதராஜன்
கணக்கியல் - திரு. வள்ளியசிங்கம்
வர்த்தகம் - திரு. ரட்ணம்
அளவையியல்-
- திரு, S, S. மனோகரன்
இந்துநாகரீகம் - திரு, பாலா
தமிழ் - திரு, நாகேஸ்வரன்
புவியியல் அரசியல்
நடைபெறுகின்றன
ஆரம்பம்: 4.4.87
சனி 3-00 மணி
(1165)

கடுர்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு பங்குனி மீ 19 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ஷஃபான் பிறை 02 (02-04-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 108

பயணிகளை பணயம் வைத்து படையினர் வடக்கே நகர்வு

மண்எண்ணெய் விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 2
யாழ் மாவட்டத்தில் உள்ள எரிபொருள் முகவர்கள் பலருக்கு மண்எண்ணெய் கிடைத்திருக்கிறது. அவர்கள் மண்எண்ணெய்யை அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவந்து சேர்த்துள்ளனர்.

நேற்று கல்விளங்காட்டில் உள்ள தனியார் விற்பனை நிலையம் ஒன்றில் மண்எண்ணெய் விநியோகம் நடைபெற்றது

ஒருவருக்கு ஐந்து லீற்றர் என்ற அடிப்படையில் மண்எண்ணெய் விநியோகிக்கப்பட்டது

பெண்களும் ஆண்களும் நீண்ட கியூவரிசையில் நின்று மண்எண்ணெய் பெற்றுக் கொண்டனர். எனினும் வீதிகளில் மண்எண்ணெய் விற்போர் நேற்று லீற்றர் 18 ரூபாவுக்கு விற்பனை செய்தனர்.

ஏனைய பகுதிகளிலும் மண்எண்ணெய் விரைவில் எரிபொருள் நிலையங்களில் விநியோகிக்கப்படும் என அறிய வருகிறது. (அ-10)

ருகுணு பல்கலைக்கழக மாணவர்கள் 36 பேர் மாத்தறையில் கைது

கொழும்பு, ஏப். 2
தேர்வு விரோத நாசகாரவேலைகளில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தில் பேரிற்றகுணு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 36 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

மாத்தறை நகரில் வைத்து இம்மாணவர்களை பொலீஸார் கைது செய்தனர்.

நேற்று இவர்கள் மாத்தறை நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இம்மாதம் 16 ஆம் திகதிவரை இவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

36 மாணவர்களில் இரண்டு பேர் பெண்கள். (உ-ஏ)

காசு குடுத்து வாங்கின ஆயுதம் முழுவதையும் வடக்கேயே தீர்த்து விடுகிறது என்று யோசிக்கிறானோ பின்னே...

மன்னார்கண்ணிவெடியில் சிக்கி 10 சிப்பாய்கள் பலி!

யாழ்ப்பாணம், ஏப். 2
மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) ரோந்து சென்ற சிப்பாய்கள் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதலில் சிக்கி பத்து சிப்பாய்கள் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்தனர்.

மன்னார் வெள்ளாங்குளம் பகுதியில் இருந்து ஒரு மைல் தொலைவில் உள்ள ஒரிடத்தில் நிப்பாய்கள் நடைபயணமாகவும் வாகனங்களிலும் ரோந்து சென்ற சமயம் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிப்பாய்களின் வாகனம் சிக்கிச் சின்னாபின்னமானது.

இதனால் பத்துப் பேர் கொல்லப்பட்டதாகவும் மேலும் பலர் காயமடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. (உ-10)

ஓய்வூதியப் பணம் கோட்டையில் பெறமுடியாது

யாழ்ப்பாணம், ஏப். 2
மே மாதம் முதல் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு வேறு வங்கியில் சேமிப்புக் கணக்கு அல்லது நடைமுறைக் கணக்கை ஆரம்பிக்கும்படி இலங்கை வங்கியின் யாழ் கோட்டைக் கிளை காரியாலயம் மூலம் ஓய்வூதியம் பெறும் அரசோர் இலங்கை வங்கி ஓய்வூதியக்காரர்கள் கோரப்பட்டுள்ளனர்.

யாழ் கோட்டை இலங்கை வங்கிக் கொடுப்பனவு காரியாலயத்தின் மூலம் தொடர்ந்தும் ஓய்வூதியம் வழங்குவது தற்போதைய சூழ்நிலையில் சாத்தியமற்றது.

ஆகவேதான் வேறு வங்கிமூலம் மே மாதம் முதல் ஓய்வூதியத்தைப் பெற நடவடிக்கை எடுக்கும்படி இவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இப்படி யாழ் செயலக உதவி அரச அதிபரும் பொதுச் சேவை தொடர்பு அதிகாரியுமான திரு. த. குலசேகரம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-ஏ)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கும் இடர் கடன் கிடைக்கும்

யாழ்ப்பாணம், ஏப் 2
அரச ஊழியருக்கு வழங்கப்படவிருக்கும் இடர் கடன் யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு. த மகாசிவம் இதனைத் தெரிவித்திருக்கிறார்.

இடர் கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் அந்தந்த வட்டாரக் கல்வி அதிகாரியின் அலுவலகத்தில் பெற (4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி மூளி

இராணுவ ஆயுதங்களுடன் பல வாகனங்கள் வருகின்றன

– அலுவலகச் செய்தியாளர்:– சு. இரத்தினராஜசிங்கம்–

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2
ஆயிரக்கணக்கான இராணுவச் சிப்பாய்கள் பெருந்தொகையான ஆயுதங்களுடனும், பல கவச வாகனங்கள், பவுசர்கள் வாகனங்கள், கிறேயின், பத்துக்கும் அதிகமான பவுசர்கள் சகிதம் வவுனியாவிலிருந்து நேற்று வடக்கு நோக்கி வந்தனர்.

வடக்கு நோக்கி வந்த பயணிகள் பஸ்கள், லொறிகள் உட்பட ஐம்பதுக்கும் அதிகமான வாகனங்களைப் பணயம் வைத்து வவுனியாவில் இருந்து மாங்குளம் வரை அவர்கள் முன்னேறினர்.

நேற்றுக்காலை 6 மணியளவில் வவுனியாவில் இருந்து பயணிகளுடன் புறப்பட்ட இராணுவ அணி ஏறத்தாழ 24 மணி நேரத்துக்குப் பின்னர் மாலை 6 மணியளவில் சுமார் 30 மைல் தூரத்தில் உள்ள மாங்குளம் முகாமை சென்றடைந்தது.

பயணிகள் பஸ்கள், லொறிகள் போன்றவை இராணுவ வாகனங்களுக்கு முன்னும் பின்னும் மெல்ல மெல்ல நகர்ந்துவர சிப்பாய்கள் நடைபவனியில் முன்னேறினர்.

இராணுவ வாகனங்களில் கொழுந்தொகையான ஆயுதங்கள், வெடிப் பொருள்கள் போன்றவையும் வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் கொழும்பிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணம் நோக்கி வந்த சரல வாகனங்களும் பல மணி நேர தாமதத்தின் (4 ஆம் பக்கம் பார்க்க)

முதுமை நீங்க மருந்து!

பீகிங், ஏப் 1
முதுமையை நீக்கும் மருந்து ஒன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

'குவாங்கிஜுவாங்' என்பது மருந்தின் பெயர்.

ஷாங்காய் மாகாணத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணர்கள் இம் மருந்தைக் கண்டு பிடித்திருக்கின்றனர்.

முதுமையைக் கொண்டுவரும் பலவீனமை நீக்கி இழந்த மின்மை ஆகியவற்றை இந்த மருந்து நீக்குகின்றது

-இப்படி ஷின்கவா சீன செய்தி ஸ்தாபனம் நேற்று அறிவித்தது. (உ-ஏ)

வயோதிப மாது காயம்

பலாலி, ஏப். 2
குரும்பசிட்டி சந்தியில் மேல்மாடி வீட்டில் நிலைகொண்டுள்ள இராணுவம் நேற்று மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் திருமதி நடராசா அன்னப்பிள்ளை என்னும் 65 வயது வயோதிப மாது படுகாயமடைந்துள்ளார்.

இடது கை மோசமாகப் பாதிக்கப்பட்டதில் தெல்லிப்பளை வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார் (உ-119)

சிப்பாய் பலி! மூவர் படுகாயம்!!

கொழும்பு, ஏப். 2
கடந்த 23 ஆம் திகதி திருமலை மாவட்டத்தில் வன்மகவாச்சியா என்னும் இடத்தில் போராளிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் உயிரிழந்தார். மேலும் மூன்று சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர்.

இப்படி கொழும்புப் தாதகரட்பு வட்டாரம் தெரிவித்தது. (உ-ஐ-ஏ)

காங்கேசனில் நேற்று 9மணி நேர நேரடிச் சமர்

2 சிப்பாய்கள் பலி; போராளி வீரமரணம்

பலாலி, ஏப் 2
காங்கேசன்துறையில் நேற்று காலை 7 மணியில் இருந்து மாலை 4 மணிவரை 9 மணி நேரம் இராணுவத்திற்கும் புலிகளுக்கும் இடையில் நேரடி மோதல் இடம் பெற்றது

இந்த மோதலில் இராணுவப் பொறுப்பதிகாரி ஒருவர் உட்பட இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தினரின் சினைப்பர் தாக்குதலில் புலிகளின் முன்னணிப் போராளியும், புலிகள் தலைவர் பிரபாகரனின் மெய்ப் பாதுகாப்பாளர்களுள் ஒருவருமான மயூரன் (19 வயது) வீரமரணமடைந்தார்.

இராணுவத் தாக்குத (4 ஆம் பக்கம் பார்க்க)

காயமடைந்த மூவர்

பலாலி, ஏப்.2
காங்கேசன்துறையில் நேற்று படையினர் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மூவரின் பெயர் விபரம்:-

1 சதாசிவம் ஞானதாசன் (68 வயது) காங்கேசன்துறை வாசி

2. சிவம் மனோராஜ் (19 வயது) மயிலிட்டி வடக்கைச் சேர்ந்தவர்.

3. இராமுப் பிள்ளை வீராச்சாமி (68 வயது) காங்கேசன்துறை யைச் சேர்ந்தவர். (உ-119)

தாக்குதலை நிறுத்த ஜனாதிபதிக்குத் தந்தி

கூட்டணி அனுப்பியது

சென்னை, ஏப்.2
தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவத் தாக்குதலை உடன் நிறுத்தவும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு அனுப்பிய தந்தியில் மேற்கண்டவாறு கோரியுள்ளது.

கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் ஆகியோர் கையொப்பமிட்டு இத் தந்தியை அனுப்பி வைத்து உள்ளனர்.

பகைநாடுகள் கூட அப்பாவிப் பொதுமக்கள் வாழும் பிரதேசங்கள் மீது குண்டு வீசவது (4 ஆம் பக்கம் பார்க்க)

செயலக முன்றலில் நாளை பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஏப் 2
பிரார்த்தனை வாரத்தின் இறுதிநாள் நிகழ்ச்சியாக நாளை வெள்ளிக்கிழமை காலை 8-30 மணிக்கு யாழ் அரச செயலக முன்றலில் சர்வ மதப் பிரார்த்தனை நடைபெறும்.

மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

தமிழரை அகதிகளாக ஐ. நா. அங்கீகரிக்க வேண்டும்;

டிச. 19க்கு முன் இருந்த இராணுவ நிலைக்கு மீளுதல் அவசியம்

சென்னையில் பாலகுமார் பேட்டி

சென்னை, ஏப். 1
இனப்பிரச்சினை சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் ஆணைக்குழு நிறைவேற்றிய தீர்மானத்தை அடிப்படையாக வைத்து, இலங்கைத் தமிழரை அகதிகளாக ஐ. நா. நிறுவனம் கணிக்க வேண்டும்

அதற்கான முயற்சிகளை இந்திய அரசு எடுக்க வேண்டும்.

ஈரோஸ் பிரமுகர் திரு. வி. பாலகுமார் சென்னையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் இப்படித் தெரிவித்தார்.

திரு. பாலகுமார் சொன்னதாவது:-

யாழ்ப்பாணத்தை மட்டும் மையமாக வைத்து இந்தியாவோ மற்ற உலக நாடுகளோ இனப் பிரச்சினையை அணுகக் கூடாது அப்படி அணுகுவதன் மூலம் இனப் பிரச்சினைக்கு சரியான தீர்வு காணுவது சாத்தியமற்ற காரியம்.

யாழ்ப்பாணம் சுதந்திரமாக இருந்தால் போதும் என்ற இந்திய நிலைப்பாடு எமக்கு மன அமைதி தரவில்லை

மீண்டும் பேச்சுக்கள் என்ற நாடகத்தை இலங்கை அரசு நடத்தப்போகிறது.

யுத்த நிறுத்தத்தைக் கொண்டுவந்து பேச்சுக்களை ஆரம்பிக்கும் முன்னர் இந்தியா, உணவு எரிபொருள், உடை, மருந்து முதலியவற்றை அனுப்பிவைக்கவேண்டும் என்று இலங்கைத் தமிழர் விருப்புகின்றனர். வடக்கு, கிழக்கு மக்கள் பட்டினியால் கஷ்டப்படுகின்றனர்.

தமிழ்ப் பகுதிகளில் நிவாரண வேலைகளில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் உலக நிறுவனங்களை அனுமதிக்கும்படி கொழும்பு அரசை இந்திய அரசு நிர்ப்பந்திக்கவேண்டும்.

பாலகுமார்

டிசம்பர் 19 நிலைக்கு மீள வேண்டும்

டிசம்பர் 19க்கு முன்னர் இருந்த இராணுவ நிலைக்கு இலங்கை அரசு செல்ல வேண்டும். பேச்சுக்களை ஆரம்பிக்க முன்னர் இதை செயலாக்கும்படி இலங்கை அரசை, இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும்.

சிங்கள மாவலி திட்டமும் இனியும் முகாம்களை ஆக்கவே, தமிழரை நிறுவ இடமில்லாத அளவுக்கு இராணுவ முகாம்களின் நெருக்கமாக நிறுவப்பட்டுள்ளன.

பேச்சுக்களைத் தொடங்கும் முன்னர் இந்த முகாம்கள் அகற்றப்பட வேண்டும். அதை நிறைவேற்றும்படி இலங்கை அரசை நிர்ப்பந்திப்பது இந்தியாவின் தார்மீகப் பொறுப்பு ஆகும்.

இன்று உலகில் இலங்கைத் தமிழர், அகதிகளாக வாழ்கின்றனர், பாலஸ்தீன அகதிகள் போன்று தமிழ் அகதிகளும் உள்ளனர். ஆகவே, தமிழரை ஐ. நா. அகதிகளாக அங்கீகரிக்கவேண்டும். மனித உரிமை ஆணைக்குழுத் தீர்மானத்தை அடிப்படையாக வைத்து இந்த முயற்சியில் இந்தியா ஈடுபடவேண்டும்

இடைத்தேர்தலின் நோக்கம்

திருமலையில் இடைத்தேர்தல் நடத்த இலங்கை அரசு முயற்சிக்கிறது. இதன்மூலம் தமிழர் பகுதிகள் வழமைக்குத் திரும்பி விட்டன என்று உலகுக்குக் காட்ட இலங்கை எண்ணியுள்ளது. அப்படிச் செய்வதன் மூலம் சமாதான முயற்சியில் இருந்து இந்தியாவை விலக்கிவிட வேண்டும் என்பதே இலங்கையின் விருப்பம்.

தமிழர் அபிலாஷைகளுக்கு எதிராக இந்தியா செயலாற்றாது என்று பிரதமர் ராஜீவ் காந்தி எமக்கு உறுதியளித்து உள்ளார். டிசம்பர் 19 யோசனையை போராளிகள் ஏற்காவிட்டால் தன்னிச்சையாக செயல்படப்போவதாக பிரதமர் காந்தி அறிவித்திருக்கின்றார். தமிழர் அபிப்பிராயங்களை பிரதமர் (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

விருப்புகள்

A/L 89 Aug. பிரிவு C O/L 87 Dec. [மீட்டல் வகுப்பு] ஆரம்ப கதவி ஆசிரியர்களுக்கான பொதுஉளச்சார்பு பொது அறிவு போட்டிப் பரீட்சை வகுப்புகள் ஆரம்பம்:- 1987-4-4 மு. ப 9-30 Science Centre, Nelliyady Karaveddy. (1168)

விசேட சேவை உத்தியோகத்தர்

கிராமசேவை அலுவலராக பதவி மாற்றம்

வட்டுக்கோட்டை, ஏப் 2 சமூக விசேட சேவை உத்தியோகத்தர்களும் கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று யாழ் செயலகத்தூடாக யாழ் மாவட்டத்தில் உள்ள சமூக உதவி அரசாங்க அதிபர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விசேட சேவை உத்தியோகத்தர்களது பதவி மாற்றத்தை அடுத்த குடிசன பிரதேச அடிப்படையில் கிராம சேவை அலுவலர் பிரிவும் மேலும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு புதிய பிரிவுகளுக்கு விசேட சேவை உத்தியோகத்தர்கள் கிராம சேவை அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ளனர். இவர்களது முந்திய சேவைக் காலமும் தற்போதைய பதவியுடன் சேர்த்துக் கணக்கிடப்படவுள்ளது.

இத்திட்டத்தின் படி 10 கிராம சேவை அலுவலர் பிரிவுக்கொன்ட சமூகசேவை உதவி அரசாங்க அதிபர் பிரிவு 15 கிராம சேவை அலுவலர்கள் பிரிவாகப் பிரிக்கப்பட்டு இப்பிரிவில் கடமையாற்றிய விசேட சேவை அலுவலர்கள் ஐவரும் புதிய பிரிவுகளுக்கு கிராம சேவை அலுவலர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

விசேட சேவை அலுவலர்கள் கிராம சேவை அலுவலர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்ட பேரதிலும் அவர்களது சம்பளம் குறைக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்படுகிறது (அ-161)

கல்விக்கு உயிர் கொடுத்தோர் புகழ் என்றுமே நிலைக்கும்

இளவாலை, ஏப் 2 'காரைகேசன் துறைக் கல்வி வட்டார கல்வி வளர்ச்சிக்கு மகுடப்பட்ட சேவையாற்றி ஒய்வுபெறும் கல்வி அதிகாரி சிவஞானசுந்தரத்தின் புகழ் என்றுமே நிலைக்கும். இவரது பொதுமை நோக்கும் பரந்த சிந்தனைச் செயற்றிறனும் நெகிழ்ச்சி மனப்பான்மையும் வலிடாரக்கல்விக்கு உயிருட்டி உரம் ஏற்றி உயர்வை அளித்துள்ளது.

காரைகேசன் கல்வி வட்டாரக்கல்வி அலுவலர் திரு பொ சிவஞானசுந்தரத்துக்கு சென்ஹெறீஸ் கல்லூரி மண்டபத்தில் சேவை நலன் பாராட்டும் மணி விழாவும் நடைபெற்றன யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம் எம் மன்சூர் தமது வாழ்த்துரையில் மேற்கண்டவாறு கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'புண்ணிய நாளான மாசிமகத்தில் சிவஞானசுந்தரனாரும் அவரது பாரியாரும் புதுமண மிழாப்போல் மங்கலகரமாக வரவேற்கப்பட்டது. சேவை நலவிழாவைப் பெரிதும் உயர்வாக்கியது என்றார்.

தலைமை வகித்த அதிபர் அடிகளார் தமது உரையில், 'இவரது தன்மைத்துவமும் சேவையும் மிகமேலானதாக இருந்ததை அதிபர்கள் ஆசிரியர்களின் பெருந் திரளான வருகை சான்று பகருகின்றது என்றார்.

தென்னிப்பனை தேவாலய வண. ரீ எஸ் பிரேம்ராஜ் அடிகளார் வாழ்த்தும் போது' கல்விக்கு உழைக்க வந்த வர்கள் பாக்கியசாலிகள் இறைவனுடன் நேரடியாக ஒத்துழைப்பவர்கள் என்றார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஒய்வுபெறும் கல்வி அதிபரின் மணிவிழா மலரை வெளியிட்டு வைத்தார். (இ-48)

திருஞானசம்பந்தருக்கு தீயெரியூட்ட முயன்ற பாண்டியனுக்கு ஏற்பட்ட கதி

யாழ்ப்பாணம், ஏப் 1 கொடுங்கோலன் பாண்டி மன்னன் திருஞானசம்பந்தப் பெருமானுக்கு தீயெரியூட்டிக் கொடுமை செய்ய முயன்ற போது ஞானசம்பந்தர் 'மையவே சென்று பாண்டியர் காணவே' என்ற இறைபருளை வேண்டிப் பிரார்த்தித்த போது நின்ற ஏவிய பாண்டியன் வெப்பு நோய்க்கு ஆளானான்

மனித உரிமைஞாயிறான வெகுஜன இயக்கத்தின் மன்னாரம் சட்டத்தரணிகள் சங்கத்தினதும் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கலந்து கொண்ட பிரார்த்தனைக் கூட்டத்தில் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

தென்னிப்பனை துர்க்கை அம்மன் ஆலயத்தில் இப் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மேலும் பேசுகையில்,சிறுஞ்சுத் துன்பங்கள் கொடுமைகள் விளைவிக்கப்படும் இச் சூழ்நிலையில் நாமும் இறையருளை வேண்டிப் பிரார்த்தித்தால் எங்களுடைய துன்பங்கள் நீங்கும்.

மாவை ஆலயத்துக்கு அமர்த்தங்கள் இழைக்கப்பட்ட போதும் உள்ளத்தில் உறுதி தளராது நாமெல்லாம் இறைவனைப் பிரார்த்திப் போமாக.

இப்படி அவர்கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மன்னாரம் சட்டத்தரணிகள் சங்கத்தலைவர் திரு க. நடராசாவும் கலந்து கொண்டார். (இ-10)

யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சங்கீத சபையின் அழகியல் ஆசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2 வட இலங்கைச் சங்கீத சபை நடத்தும் ஆசிரியர் தரத் தேர்வுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான சிறப்புக் கருத்தரங்கு மேற்படி சங்கீத சபை நடத்த உள்ளது.

இக்கருத்தரங்கு இம் மாதம் 6,7,8ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் வதிவிடக் கருத்தரங்காக நடைபெறும்.

ஆசிரியர் தரத் தேர்வுக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் அனைவரையும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் கலந்து கொள்வதற்கான கிண்ணப்பங்களை செயலாளர் வ.இ. சங்கீத சபை, கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பும்படியும் சபை கேட்டுள்ளார்.

ஏப்ரல் 6ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும் கருத்தரங்குக்கு யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளரும் சங்கீத சபைத் தலைவருமான திரு எம் எம். மன்சூர் தலைமை வகிப்பார்.

7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதம கல்வியதிகாரி திரு கு. சோமசுந்தரம் தலைமையில் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் பேராசிரியர் ப. சந்திரசேகரம், இ முருகையன், திரு வேல் ஆனந்தன், திரு க சிவத்தம்பி, கலாநிதி நா சுப்பிரமணியன் ஆகியோர் உரையாற்றுவர்.

இசையரங்கு நிகழ்ச்சியைத் தொடர்ந்து உபகரண ஆக்கச் செயலமர்வு நடைபெறும்.

முதலிருநாள் நிகழ்ச்சிகளும் முற்பகல் 8-30 மணி முதல் இரவு 8.30 மணிவரை நடைபெறும்

ஏப்ரல் 8ஆம் திகதி புதுவெழுமை நிகழ்ச்சிகளுக்குச் சபையின் உப தலைவர் திரு ப சந்திரசேகரம் தலைமைவகிப்பார். கலாநிதி ப. கோபால கிருஷ்ணன், கலாநிதி சபா. ஜெயராசா, திரு ஞ. சோமசுந்தரம், திரு க. கணபதிப்பிள்ளை, பிரம்மஸ்ரீ ப. சோமாஸ்கந்தசர்மா, திரு வி சிவசாமி ஆகியோர் உரையாற்றுவர். (இ)

2-ஆவது பிறந்ததின வாழ்த்து

சிறிகலா (LOGA)

பாலகப்பிரமணியம்

புங்குடுதீவு 3-ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பாலகப்பிரமணியம் கிருஷ்ணகுமாரி தம்பதியினரின் செல்வப் புதல்வி சிறிகலா தனது 2ஆவது பிறந்தநாளை (02-04-87) இன்று (WestGermany) யில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்

சிறிகலாவை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, J P. தாத்தா, அம்மம்மா, G S பெரியப்பா, பெரியம்மா, பிள்ளைகள், சாவகச்சேரி மாமா, மாமி, பிள்ளைகள், சண் பெரியப்பா, பெரியம்மா குடும்பத்தினர், சுவிஸ் சந்தனு, சித்தப்பா, சுவிஸ் கமலி மாமா, மாமி குடும்பத்தினர், சச்மொமா மாமி, ஷாலினி மச்சாள், சுவிஸ் சதானமா, விவேமாமா; கொழும்பு S.K. நாதன் மாமா, லிங்கன், மாமாமார், தர்மராஜ் சித்தப்பா; மற்றும் சித்திமார்கள், மைத்துனிமார் ஆகியோரும் கலையுடன் கல்வியும், பெண்கள் தனிலரும் பெருமையும் பெற்றிடவே வாழ்த்துகின்றனர். (1170)

செய்திக்கொத்து

இப்படியும் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்2 யாழ் மணிக்கூட்டு ஒழுங்கையில் உள்ள வீடொன்றில் பிச்சை கேட்டுச் சென்ற பெண்கள் மூவர் அவ்வீட்டுச் சேவல் ஒன்றை மடக்கிப் பிடித்து மடியில் கட்டிச் சென்ற சம்பவமொன்று கடந்த தினங்களுக்கு முன் நடைபெற்றது

பிச்சைக்கு வந்தவர்களில் ஒரு பெண் தண்ணீர் கேட்டு வீட்டாரை திசை திருப்ப மற்றைய இரு பெண்களும் சேவலை மடக்கிப் பிடித்தனராம்.

சேவல் வீதியில் கொண்டு போகும் வரை பொறுத்திருந்த வீட்டுக்காரர் வீதியில் அப்பெண்களை துரத்திப் பிடித்த சம்பவம் அந்த ஒழுங்கையில் பெரும் கலவரப்பை ஏற்படுத்திவிட்டது. (இ)

சனசமூக நிலைய ஆண்டுவிழா

வேலணை, ஏப்ரல் 2 புங்குடுதீவு சிவகோட்டி சனசமூக நிலையத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்விட்டு 14 ஆம் திகதி புதுவருடத் தினத்தன்று விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

விழாவில் சைக்கிள் ஓட்டம், மரதன்ஓட்டம் ஆகியவற்றில் பங்குபற்றி வெற்றிபெறும் வீரர்களுக்கு தங்கப்பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன. (இ-160)

விஞ்ஞான மன்றம்

கொடிகாமம், ஏப் 1 அல்லாரை அ. த. க. பாடசாலையில், விஞ்ஞான ஆசிரியை திருமதி ச கப்பிரமணியம் தலைமையில் விஞ்ஞானக் கண்மன்றம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் திரு. வி. மார்க்கண்டு உப அதிபர் திரு. கா. கணபதிப்பிள்ளை ஆகியோர் விஞ்ஞானக்கல்வியின் மகத்துவம் பற்றி உரையாற்றினர். (இ-75)

ஆலோசனைக் கூட்டம்

கரவெட்டி, ஏப்ரல் 2 பேராசிரியர் வைரசுந்தரியின் ஐந்தாவது நினைவு தினம் பற்றிய ஆலோசனைக் கூட்டம் ஒன்றை தேசிய கல்வி இலக்கிய பேரவை நடத்தவுள்ளது

இம்மாதம் 5 ஆம் திகதி பிற்பகல் மூன்று மணிக்கு நல்லூரில் அமைந்துள்ள நாவலர் கலாசார மண்டபத்தில் கூட்டம் நடைபெறும். (இ-70)

உணவு முத்திரை

வேலணை, ஏப்ரல்2 வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பத்து கிராம சேவை அலுவலர் பிரிவுகளிலும் கடன் வலயச் சங்கத்தினூடாக பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான உணவு முத்திரைகள் துரிதமாக வழங்கப்பட்டு வருகின்றன. (இ-167)

ஏலவிற்பனை

வேலணை, ஏப்2 வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் பழைய இரும்புக்கம்பிகள், புடைவைகள், கண்ணாடிப் பாத்திரங்கள் கட்டப்பட பலபொருட்கள் ஏலத்தில் விற்கப்பட்டன. (இ-167)

கல்வி அதிகாரி நன்றி

யாழ்ப்பாணம்ஏப்ரல் 1 இத்தனை இடர்பாடுகளுக்குளும் கடற்பயிற்சிப் போட்டியை திறம்பட நடத்திமுடித்த பாடசாலை அதிபர்களுக்கும், வலிடாரக்கல்வி அதிகாரிகளுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

கடற்கல்விக்குப் பொறுப்பான வலிடாரக் கல்வி அதிகாரி திரு.வி. கணேசலிங்கம் மேற்கண்டவாறு உதயனுக்கு தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்தில் உள்ள 9 வட்டாரங்கள் 14 கொத்தணிகளில், 3 வட்டாரங்கள் 1கொத்தணி ஆகியவற்றுக்கிடையேயான போட்டிகளே நடத்தப்படவுள்ளன என்றும் அவர் சொன்னார் .(இ-7)

விளையாட்டரங்கு

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் சுற்றுப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 2 ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் நடத்தும் கரபந்தாட்டப் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கரபந்தாட்டப் போட்டிகள் இரண்டு பிரிவுகளாக நடத்தப்படும்.

இந்தப் போட்டி 6பேர் கொண்ட போட்டியாகவும் 4 பேர் கொண்ட போட்டியாகவும் அமையும்.

மென்பந்து கிரிக்கெட் போட்டிகள் 20 ஓவர்களைக் கொண்ட போட்டியாக அமையும்.

இந்த இரு சுற்றுப் போட்டிகளிலும் கலந்து கொள்ள விரும்பும் விளையாட்டுக் கழக அணிகள் எதிர் வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும்.

விண்ணப்பப்படிவங்களுக்கும் மேல திக விவரங்களுக்கும் ஈச்சமோட்டை விளையாட்டுக் கழக செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்

ஒளவையார் வென்றது

நெடுங்கேணி, ஏப்ரல் 2 நெடுங்கேணி - மருதோடை சக்தி விளையாட்டுக் கழகத்திற்குக் நெடுங்கேணி ஒளவையார் விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் நாவலர் மைதானத்தில் நடந்து முடிந்த சிநேகபூர்வ கரபந்தாட்டப் போட்டியில் ஒளவையார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (இ-108)

நாவலர் இல்லம்

வவுனியாக்கோட்டை, ஏப்2 பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி வித்தியாலய அதிபர் திரு ஆ., இராசநாயகம் தலைமையில்நடைபெற்றது.

152 புள்ளிகளைப் பெற்ற நாவலர் இல்லம் முதலாவது இடத்தையும் 345 ½ 284½ புள்ளிகளைப் பெற்ற வள்ளுவர், பாரதி இல்லங்கள் முறையே இரண்டாம் மூன்றும் இடங்களையும் பெற்றன (இ-167)

விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2 கோட்டக்கல்வி அலுவலக அமைப்பின் கீழான பாடசாலைகளின் விளையாட்டுவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறும்

இந்த அமைப்பின் கீழ் உள்ள எட்டு கொத்தணிகளைச் சேர்ந்த பாடசாலைகள் இதில் பங்கு பற்றுகின்றன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் காலை 9 00 மணிக்கு ஆரம்பமாகும் இந்த விழாவுக்கு வடமாநிலக் கல்வி பணிப்பாளர் எம் எம். மன்சூர் பிரதம அதிதியாக கலந்துகொள்வார். (இ-7)

கம்பன் இல்லம்

அல்வேலி, ஏப்ரல் 2 புத்தூர் கலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில் கம்பன் இல்லம் முதலாம் இடத்தையும் பாரதி இல்லம் இரண்டாம் இடத்தையும் வள்ளுவன் இல்லம் மூன்றாவது இடத்தையும் பெற்றன. (இ-11)

சமுதாய மறு மலர்ச்சிக்கு இளைஞர்கள் உதவ வேண்டும்

சுன்னாகம், ஏப்ரல் 2 இளைஞர்கள் எப்போதும் உருவாக்கப் பணிகளிற்நாடிகளாகவே இருக்க வேண்டும். சமுதாய மறுமலர்ச்சிக்கு உதவும் வகையில் தம்மானவை அனைத்து உதவிகளையும் செய்வதன் மூலமே எமது எதிர்காலச் சந்ததியினருக்கு ஒரு உற்ற துணையாக சக்தியை கூடி எழுப்ப முடியும்.

யாழ் மாவட்ட தேசிய இளைஞர் சேவை உதவி அதிகாரி திரு எம். நவகுலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தேசிய இளைஞர்சேவைகள் மன்றத்தினர் உடுவில் உதவி அரச அதிபர் பிரிவுக்கு உட்பட்ட உடுவில் இளைஞர் கழகம் ஒன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்த உரையாற்றுகையிலேயே திரு. நவகுலசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட சம்மேளன உபதலைவர் திரு பி. அருள்சோதியும் கலந்து கொண்ட இக் கூட்டம் உடுவில் மாக் தமிழ் கலைக் பாடசாலையில் நடைபெற்றது (இ-27)

மகான்கள் கூறியதை மறந்தாலும் சர்வதேச சட்டங்களாவது ஞாபகத்தில் இருக்கவேண்டும்

கரவெட்டி, ஏப்ரல் 2 புத்தர் சொன்னதோ, இயேசு கிறிஸ்து நாதர் சொன்னதோ, முகம்மது நபிகள் நாயகம் சொன்னதோ ஞாபகத்தில் இல்லாவிட்டாலும் சர்வதேச சட்டங்களாவது அரசாங்கத்துக்கு ஞாபகத்தில் இருக்கவேண்டும். அதுவும் இல்லாவிடில் தாங்கள் உருவாக்கிய அரசமைப்பையாவது அவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

தோலகட்டி ஆக்கிரமத்துக்குள் பாதுகாப்புப் படையினர் அத்துமீறிச் சென்று ஆக்கிரமித்ததைக் கண்டித்து வதிரி புனித அந்தோனியார் ஆலயத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அதில் உரையாற்றிய சட்டத்தரணி திரு. வி. மகாலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கரவெட்டி புனித மேரி ஆலயத்திலிருந்து மௌன ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.

ஊர்வலம் முடிவிடம் நடந்த பொதுக் கூட்டத்திற்கு கரவெட்டி பங்குத் தந்தை அருட்திரு ஆர். எல் சாமநாயகம் அடிகள் தலைமை வகித்தார்.

அதில் இலங்கை தமிழ் காங்கிரஸ் இளைஞர் சம்மேளன செயலாளர் ஆர். ஈ. ஆனந்தராசா சேகரையில் இந்த அரசாங்கம் அடிப்படை மனித உரிமைகளை மீறும் விடயத்தில் தென் ஆபிரிக்காவையும் தோற்கடித்து விட்டது என்றார்.

ஒய்வுபெற்ற அதிபர் திரு ஏ. விநோதி சேகரையில், அடக்குமுறை மூலம் எதிர்ப்பை சமாளித்து விடலாம் என இந்த அரசு எண்ணினால் [illegible] கிராமத்தில் இருக்கிறது. வதிரி திருஇருதயக் கல்லூரி அதிபர் திரு. எம். விக்கள் நன்றியுரை கூறினார். (இ-70)

ஆசிரியர் பற்றுக்குறை

பண்டத்தரிப்பு, ஏப்.2 பண்டத்தரிப்பு ஜெசிந்தா ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றுக்குறை நிலவி வருகிறது.

பாடசாலை பெற்றோர் ஆசிரியர் சங்கம் யாழ் கல்வி அதிபரிடம் நேரிக் சந்தித்து பாடசாலையில் அத்தியாவசிய அவசர தேவைகளை நிறைவு செய்து தருமாறு கேட்டுள்ளது. மாணவர்களுக்கு குடிநன்னீர் வசதிகள் செய்து தரும்மாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ-180)

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகம்

வட்டுக்கோட்டை, ஏப்2 வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக நடப்பாண்டு உத்தியோகத்தர்கள் தெரிவு சித்தன் கேணி தொண்டேயம் தொழிற்பயிற்சி நிலையத்தில் வட்டுக்கோட்டை லயன்ஸ் கழக முன்னாள் பிரெஸ் - தலைவர் திரு க. அருளுரைமி தலைமையில் நடைபெற்றது.

நடப்பாண்டு உத்தியோகத்தர்களாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: டாக்டர் கல் போல்ஸ் அத்தனுசியார் உப தலைவர்கள்: திரு. கே. சபாரத்தினம், ஜே. பி கலாநிதி வி. நித்தியானந்தன், திரு ரி. ரமு செல்லையர்; செயலாளர்: [illegible] கணக்காளர்: எஸ் மரியநாயகம். (இ-161)

ஈச்சிலம்பத்தையில் மீளக் குடியேறியோர் படையினர் கெடுபிடியால் பாதிப்பு

மட்டக்களப்பு, ஏப்ரல் 2 ஈச்சிலம்பத்தையில் மீளக் குடியேறியோர் தேடுதல் என்ற போர்வையில் ஆயுதப்படையினரின் கெடுபிடிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஈச்சிலம்பத்தை முன்னாள் கிராம சபைத் தலைவர் திரு. இ ஞானசேகரன் உள் நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. கே டபிள்யூ. தேவநாயகத்தை அவரது அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து மேற்கண்டவாறு முறையிட்டார்.

சுமார் 30 மாதங்கள் சதிரவெளி அகதிகள் முகாம்களில் வசித்து விட்டு அரசின் வேண்டுகோளுக்கிணங்க மீளக் குடியமர்ந்த அகதிகள் பாதுகாப்பற்றவர்களாக இருக்கிறார்கள்.

கடந்த 18-ஆம் 19-ம் 20-ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சிலர் சோதனையிடப்பட்டுள்ளார்கள் இதனால் குடியிருப்பாளர்கள் காடுகளில் தஞ்சமடைய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந் நிலையில் அகதிகளுக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புஉத்தரவாதம் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அமைச்சரிடம் ஞானசேகரன் வலியுறுத்தினர் (இ-21)

யாழ் இந்துக் கல்லூரி பரிசுத்தினம்

02. 04. 1987 இன்று நடைபெறவிருந்த பரிசுத்தினம் தவிர்க்க முடியாத காரணங்களினால் இரண்டாம் தவணைக்குப் பிற்போடப் பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

யாழ் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம். 01-04-1987.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள.

(1828)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

கல்லிலே கடவுளைக் காண வேண்டியது தான் உண்மையான நோக்கம். ஆனால் மனிதன் இன்று கடவுளை கல் ஆக மாற்றிக் கொண்டு இருக்கிறான். இது உண்மை நிலைக்கு மனிதனை எப்படி அழைத்துச் செல்லும்?

— பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா

உதயன்

இல.15,1ஆவதுஒழுங்கை தொலைபேசி:24805
மின்சார நிலைய வீதி, 22078
காரிகாலன் 2-04-1987 த.பெ.இல. 88

ஜனநாயகத்தைத் தேடி...:

யாழ் ஆஸ்பத்திரியில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலால் உயிரிழந்த பொதுமக்களின் — நோயாளிகளின் மரண விசாரணையின் போது யாழ் நீதிவான் திரு. க. சதிரவேற்பிள்ளை தெரிவித்த சில அவதானக் குறிப்புகளை வலைத்திற் கொள்வது அவசியமாகிறது.

- ✶ ஆஸ்பத்திரியில் நடந்த ஷெல் மரணங்கள் தொடர்பான சந்தேக நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முயல வேண்டும்.
- ✶ அப்போது தான் மக்களுக்கு நீதி பரிபாலனத்தில் நம்பிக்கை ஏற்படும்.
- ✶ அப்பாவி மக்கள் இராணுவத்தினரால் அநியாயமாகக் கொலை செய்யப்படுவதை தடுத்து, மக்களைப் பாதுகாக்கச் சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த மூன்றும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடையது. ஒரு ஜனநாயக நாட்டில் நிச்சயம் செலுத்தப்பட வேண்டியவை.

உண்மையான ஜனநாயக நாட்டில், சட்டமியற்றும் நாடாளுமன்றமும், நீதி நிர்வாகத் துறையும், அரச (சிவில்) நிர்வாகத் துறையும், தனித்தனியாக சமாந்தரமாக இயங்க வேண்டியவை. நீதி நிர்வாகத் துறையைப் பொறுத்தமட்டில் அதற்குத் தனித்துவமானதும், மகிமைக்கு உரியதுமான விசேஷ அதிகாரங்கள் உண்டு. மொத்தத்தில் நாடாளுமன்றம், அரச நிர்வாகம் ஆகிய இரண்டையும் விட நீதி நிர்வாகம் சிறப்பு அதிகாரங்களை உடையது.

நீதி வழங்கப்பட்டால் மட்டுமே நீதி பரிபாலனத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை உண்டாகும். நீதி பரிபாலனத்தில் நம்பிக்கை வைத்தால் மட்டுமே நாடாளுமன்றமும், அரச நிர்வாகமும் விடும் தவறுகளுக்கு நிவாரணமும் நீதியும் பெற முடியும் என்ற முழு நம்பிக்கையும் மக்களுக்கு ஏற்படும். நீதி வழங்கப்படுவது மட்டும் போதாது அது செயலில் நடந்தாகவும் வேண்டும்.

ஆஸ்பத்திரி மீதான ஷெல் தாக்குதல்களால் கொலைகள் நிகழ்ந்துள்ளன. அக்கொலைகளைப் புரிந்தவர்களைக் கண்டு பிடித்துக் கைது செய்யுமாறு நீதிபரிபாலனத்துறை உத்தரவிட்டிருக்கிறது. ஆனால் அதனைச் செயல்படுத்தக் கூடியதாக சட்ட அமுல் உறுப்பான பொலீஸ் பகுதி இயங்க முடியவில்லை.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கூட பயங்கரவாதச் சந்தேக நபர்களைக் கடுவதற்கும், அவர்களின் சடலங்களை எரிப்பதற்கும் புதைப்பதற்கும் மட்டுமே அரச படைகளுக்கு சட்டப் பேர்வை வழங்கி இருக்கிறது.

யாழ். ஆஸ்பத்திரியில் இறந்தவர்கள் பயங்கரவாதிகளும் அல்லர்; பயங்கரவாதச் சந்தேக நபர்களும் அல்லர். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள்; அப்பாவி மக்கள். அப்பாவி மக்களைக் கொலை செய்தவர்கள் சாதாரண குற்றங்கள்வைச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். அதற்காகக் கைது செய்யப்பட வேண்டியவர்கள் நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட வேண்டியவர்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அதனைச் செய்ய முடியவில்லை. சட்ட அமுல் இயந்திரம் முற்றாக வலு இழந்து விட்டது. அதனால் நீதிபரிபாலனமும் கையாலாகாத் தன்மையினதாகி விட்டது.

யாழ்ப்பாணத்தில் மட்டும் என்ன? மற்றும் பல தமிழ் மாவட்டங்களிலும் அதே நிலைதான். அப்பகுதிகளுக்கு மக்கள் (நாடாளுமன்றப்) பிரதிநிதித்துவமும் இல்லை அரச நிர்வாகமும் (சிவில் நிர்வாகமும்) அவ்வளவாக ஸ்தம்பித்து விட்டது.

மொத்தத்தில் தமிழ்ப் பகுதிகளில் ஜனநாயகச் செயற்பாடு எதுவுமே இல்லை. உத்தியோக பூர்வமாக இராணுவ ஆட்சி பிரடனப்படுத்தப்படாவிட்டாலும் இராணுவ ஆட்சியின் அதிகாரத்துக்கு உட்பட்டது போலவே இப்பகுதிகளில் காரியங்கள் நடக்கின்றன.

ஆசியாவில் ஜனநாயக மரபுகளைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் இலங்கையும் ஒன்று என உலக அரங்குகளிலும், உள்ளூர் மேடைகளிலும் உரப்போடும் உத்தமருக்கு, சிஷ்யர்களும் பிற்றி வருகிறார்கள். ஆனால் இராணுவ ஆட்சியின் கீழ் தமிழர்கள் மீது ஆதிபத்யம் செலுத்துகிறார்கள் என்பதை இனியும் உலக நாடுகள் தெரிந்து கொள்ளாமல் இருக்க நியாயமில்லை. தமிழ்ப் பகுதிகளில் ஜனநாயகத்தை தேடியும் கண்டுபிடிக்க முடியாது என்பதை அவை புரிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயகமும், நீதியும் மனித தர்மம் பிழைத்த நாட்டில் மக்கள் உரிமைப் போர் நடத்துவதில் என்ன தவறு?

ஜே. ஆர். அரசு, இராணுவ ஆட்சியின் கீழ் தமிழர்களை நசுக்கி, அவர்களைக் கொன்றொழிப்பதாக தான் அவர்கள் உரிமைப் போராட்டம் நடத்துகிறார்கள் என்பதை உலக நாடுகள் இனியாவது புரிந்து கொள்ள வேண்டும். அந்த உரிமைப் போராட்டத்தை அவை அங்கீகரிக்கவும் வேண்டும்.

றேகனின் 'வீட்டோ'வை காங்கிரஸ் முறியடிப்பு

வாஷிங்டன், ஏப் 1

அமெரிக்க ஜனாதிபதி றேகன் 'வீட்டோ' அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டமூலம் ஒன்றைத் தடுத்து வைப்பதற்கு எடுத்த முயற்சியை மக்கள் பிரதிநிதிகள்சபை காங்கிரஸ் தோற்கடித்துள்ளது

எட்டாயிரத்து எண்ணூறுகோடி டாலருக்கான போக்கு வரத்துத் துறைநிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு றேகன் தமது வாக்குத் தடுப்பு உரிமையைப்பயன்படுத்தி மேற்கொண்ட முயற்சியையே மக்கள் பிரதிநிதிகள்சபை தோற்கடித்தது.

இச்சட்டமூலம்செனட் சபைக்கு வாக்கெடுப்புக்கு விடப்படும் பொழுது முன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளினாலேயே றேகனின் வீட்டோவைத் தோற்கடிக்க முடியும். (ஒ)

ஆஸ்கார் விருதுகள்

லாஸ்ஏஞ்சல், ஏப் 1

ஆஸ்கார் விருதுகளுக்காக லாஸ்ஏஞ்சல் நகரில் நடந்த அகிலஉலக திரைப்படவிழாவில் சிறந்த நடிகராக பிரபல ஆங்கில நடிகர் போல் நியூமன் தெரிவானார்.

சிறந்தபடமான வியட்நாம் யுத்தத்தைப் பின்னணியாக் கொண்ட 'பிளட்டூன்' என்ற படம் சிறந்த படமாகத் தெரிவானது.

சிறந்த நடிகையாக செவிப்புலன் அற்ற நடிகைநேர்வின் மகளின், தனது முதலாவது படம் மூலம் தெரிவானார்.

லோல்நியூமன் ஆறு தடவை 'ஆஸ்கார்' விருது பெறுவதற்காக இதற்குமுன்னர் சிபார்சு செய்யப்பட்டபோதிலும் இம்முறையே முதலாவது தடவையாக இவ்விருதைப் பெற்றார். (ஒ)

மத்தியகிழக்கு சமாதானத் தீர்வுக்கு சர்வதேச மாநாடு

வாஷிங்டன், ஏப்ரல் 1

மத்தியகிழக்கு நாடுகளில் சமாதானத் தீர்வு காண்பதற்காக சர்வதேச மாநாடு ஒன்றிற்கான சந்தர்ப்பங்கள் பற்றி ஆராயப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள்சபையின் பொதுச்செயலாளர் பேரஸ் டி கியூலர் இதனை மேற்கொண்டு வருகிறார்.

அரபு - இஸ்ரவேல் பிரச்சினைத் தீர்வுக்கான சர்வதேச மாநாடு ஒன்றைக், கூட்டும்எண்ணம் மேமாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் இதுபற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் ஐ.நா. பொதுச்சபை கடந்த நவம்பர்மாதம் டி கியூலரை கேட்டிருந்தது. (ஒ)

எல்சல்வடோரில் இராணுவத்தின் மீது

போராளிகள் கடும் தாக்கு!

40 சிப்பாய்கள் பலி!

சான்ஸ்வடோர். ஏப். 1

மத்திய அமெரிக்க நாடான எல்சல்வடோரில் அரசுத் துருப்புக்களுக்கும் இளர்ச்சியாளர்களுக்குமிடையே நடந்த கடும் சமரில் 40 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இளர்ச்சியாளர் தரப்பில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.

சான்சல்வடோருக்கு அண்மையில் உள்ள பிரதான இராணுவமுகாம் வாசலில் இத்திடீர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

'சென்றி' நிலையம் முற்றாக தகர்க்கப்பட்டதாகவும் அங்கு இருந்த சிப்பாய்களுடன் அமெரிக்க இராணுவ சிரேஷ்ட ஆலோசகர் ஒருவர் பலியானதாகவும் அறிவிக்கப்பட்டது.

சுமார் பத்து நிமிட நேரத்தில் இத்தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேறியதாக இளர்ச்சியாளர் தெரிவித்தனர்.

எனினும் இத்தாக்குதல் பற்றி அமெரிக்க வானொலி தெரிவிக்கையில் இளர்ச்சியாளர்கள் கடந்த ஒரு வருட காலத்துக்குள் 18 ஆவது தடவையாக இத்தாக்குதலை நடத்தியதாகவும் அதில் 40 சிப்பாய்கள் உட்பட 30 இளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதாகவும் அறிவித்தது.

சான்சல்வடோரில் மோதல்கள் தொடர்வதாகவும் பல கிட்டங்கள் தீப்பிடித்து எரிவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது (ஒ)

இஸ்ரவேல் மத்தியவங்கி அங்கீகாரம்

தெல்அவிவ், ஏப்ரல் 1

இஸ்ரவேலுக்காக உளவு பார்த்த குற்றச்சாட்டுக்காக ஆயுட்கால சிறைத்தண்டனையை அனுபவித்தவரும் அமெரிக்காவின் நற்தையாருக்கு ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர்களை வழங்குவதற்கு இஸ்ரவேல் மத்திய வங்கி அங்கீகாரம் அளித்துள்ளது.

முன்னாள் அமெரிக்க கடற்படை உளவாளியும் பிரிவு அதிகாரியான கோவாட் நூற்றுக் கணக்கான இரகசியப் பத்திரங்களை இஸ்ரவேலுக்குக் கொடுத்ததாக ஆயுட்கால சிறைத்தண்டனையை அனுபவித்து வருகிறார். (ஒ)

வெளி உலகில்

நெதர்லாந்து அரசு அகதிகள்மீது கடுமை

ஆம்ஸ்டாம், ஏப். 1

நெதர்லந்து அரசாங்கம் தமது நாட்டிற்கு அரசியல் தஞ்சம் கோரி வருபவர்கள்மீது கடும் நடவடிக்கைஎடுக்கத் தீர்மானித்துள்ளது.

இக்கடிதம் இதுவரை அரசியல் தஞ்சம் கோரியுள்ள சுமார் பதினாயிரம் வெளிநாட்டவர்களும் கிலவேளை பாதிப்படைவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

தமதுநாட்டில் தஞ்சம் புகுவோரின்எண்ணிக்கை மடுமோசமாக அதிகரித்து வருவதாலேயே இந்த நடவடிக்கை என நெதர்லந்து அறிவித்தது

இதுவரையில் நாலாயிரம் இலங்கை அகதிகள் அங்குள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

சமர்சர் தற்கொலை

கேப்டவுன், ஏப். 31

தென் ஆபிரிக்காவின் சுற்றுலாத் துறைஅமைச்சர் ஜோர்டிலே தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

தனியே துப்பாக்கியால் சுடப்பட்டு மரணமான இவரின் அருகே இவரது துப்பாக்கியும் காணப்பட்டது.

தென் ஆபிரிக்காவின் இன ஒதுக்கல் இவர் கண்டிக்க ஆரம்பித்திருந்தார். அதனை அரசாங்கம் வன்மதனில் எடுக்காமல் போனதாலேயே இந்த தற்கொலை என நம்பப்படுகிறது (ஒ)

கரப்பொத்தான்!

வெஸ்ட்ஹாம் போதனா ஆஸ்பத்திரி குசினிக்கு மூடுவிழா

லண்டன், ஏப் .1

லண்டன் வெஸ்ட்ஹாமில் உள்ள போதனா ஆஸ்பத்திரியின் குசினியை உடனடியாக மூடிவிடும்படி லண்டன் நீதிமன்றம் ஒன்று உத்தரவிட்டது.

இக்குசினிக்குள் கரப்பொத்தான் பூச்சிகள் காணப்பட்டதைத் தொடர்ந்து மூடிவிடும் உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது

சுகாதார முறைப்படி குசினி பராமரிக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டு தொடரப்பட்ட வழக்கிலேயே இப்படி தீர்ப்பு வழங்கப்பட்டது.

புதிய குசினி ஒன்றைக் கட்ட தேவையான நிதியை ஒதுக்கித் தரும்படி ஆஸ்பத்திரி நிர்வாகம் தற்போது சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுள்ளது (இ-எ)

சென்ற வருடம் செர்னோபிலில் 15000 பலியா?

மாஸ்கோ, ஏப்ரல் 1

ரஷ்யாவில் கடந்த ஏப்ரல்மாதம் செர்னோபில் அணு ஆலை விபத்து நடைபெற்ற ஐந்துமாதங்களுக்குள் சுமார் பதினாயிரம் மக்கள் மடிந்ததாக ரஷ்யாவின் அரசாங்கக் கொள்கையில் அதிருப்தி அடைந்துள்ள வெளிநாட்டு நிபுணர் தெரிவித்தார்.

இவ்விபத்தில் 31 பேர் மட்டுமே மரணமடைந்ததாக ரஷ்யா சென்ற வருடம் அறிவித்தது. (ஒ)

இனஅழிப்பு நடவடிக்கையில் இலங்கை அரசு:

உடனடியாகத் தலையிட்டு தமிழரைக் காப்பாற்றுங்கள்

அமெரிக்க தமிழர் நலன் கமிட்டி ராஜீவுக்கு மகஜர்

அமெரிக்காவில் இயங்கும் தமிழர் நலன் மனித உரிமைக் கமிட்டியின் தலைவர் டாக்டர் பெஞ்சமின் ஜோசப் ராஜ், பிரதமர் ராஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ள மகஜரின் தமிழாக்கம் இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.

இலங்கை அரசு தமிழர் மீது தற்போது மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை, பொருளாதார முற்றுகை எமக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை.

காரணம் இப்படியான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக ஜனாதிபதி ஜெயவர்த்தனா பகிரங்கமாக பல மாதங்களுக்கு முன்னரே சொல்லியிருந்தார்.

11.7.1983 இல் லண்டன் டெய்லி ரெலிகிராப் நாளிதழிற்செய்தியாளர் அயன்வார்ட்டுக்கு ஜனாதிபதிஜெயவர்த்தனா பேட்டி அளித்தார் அப்பேட்டியில் ஜனாதிபதி பின்வருமாறு கூறியிருந்தார்:—

"தமிழர் அபிப்பிராயம் பற்றி எனக்குக் கவலையில்லை. அது பற்றி நான் இப்போது நினைக்க முடியாது. அவர்களின் உயிர் பற்றியும் நினைக்க முடியாது தமிழர் பிரதேசத்தின் மீது எவ்வளவு நிர்ப்பந்தம் சுமத்துகிறோமோ சிங்களவர்கள் அந்தளவுக்கு சந்தோஷப்படுவார்கள். உண்மையில் தமிழரை நான் பட்டினி போட்டால் சிங்களவர் மகிழ்ச்சி அடைவர்.

25.10.1985 இல் பி.பி.சி. வானொலிக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி ஜெயவர்த்தனா சொன்னதாவது: இன்னும் யாழ்ப்பாணத்தை முழுமையாகக் கவனிக்க நான் தயாராக இல்லை.

"முதலில் நான் ஏனைய மாகாணங்களை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். யாழ்ப்பாணத்தைக் கவனிப்பது அவ்வளவு கஷ்டமான காரியமில்லை. யாழ் குடாநாட்டுக்கான உணப்பொருள் விநியோகத்தைத் தடுத்துவிட எங்களால் முடியும். அப்படிச் செய்தால் ஒருமாதகாலத்தில் தீவிரவாதிகளை வெளியேற்றி விடுவோம்.....'

1983, 1985ஆம் ஆண்டுகளில் மேற்கண்டவாறு கூறியவரே தற்போதைய திரு. ஜெயவர்த்தனா 1987இல் அமுல் நடத்தி விரும்கிறார்.

அடக்குமுறைக்காரனான, நிர்க்கதியற்ற இலங்கைத் தமிழர்களை உயிர்பிழைப்பதற்குத்தகுதியே முற்றுமுழுதாக நம்பியுள்ளனர்.

தமிழரைக் காப்பாற்றும் கடமை இந்தியாவுக்கு உண்டு நீதி, நியாயம் கிடைப்பதற்காக தமிழரின் நிலையை உலக அரங்கில் எடுத்துச்சொல்லும் பொறுப்பும் இந்தியாவுக்கும் உண்டு.

திரு. ஜெயவர்த்தனா பேச்சைக் என்று கூறுவது. இந்தியாவைத் தட்டிக்கழிக்கவே

1983 ஜூலையில் 4ஆயிரம் தமிழர்கள் வரை கொல்லப்பட்டனர். 1986இல் ஆயிரத்துக்கு தமிழர் உயிர்ரிழந்தனர். 1985இல் சுமார் 8,215 அதிகமான தமிழர் கொல்லப்பட்டனர். பலர் காணாது செய்யப்பட்டனர். அதன்பின்னர் காணாமற் போய்விட்டனர். மேற்கூறியவர்களை மூலம் தீர்வு என்று சொல்லாமல் ஒரு நாள் கூட 1986இல் கழிந்தது இல்லை.

பொருளாதார முற்றுகையுடன் 1987ஆரம்பமானது. வடபகுதியில் பொருளாதார முற்றுகை, கிழக்கில் இராணுவ நடவடிக்கை இப்படி அரசின் அடக்குமுறை தொடர்கிறது

1984 வரை இந்தியா பற்றி இலங்கை பயந்திருந்தது இப்போது இந்தியா குறித்து இலங்கை கவலை கொள்வது இல்லை. இந்தியா நினையான கொள்கை இல்லாத நாடு என்று இலங்கை கருதுவதே இதற்குக் காரணம். இதனால் மனித சரித்திரத்தில் இல்லாதபடி அதிகாரமற்ற சிறுபான்மை இனத்தை அழிக்க ஒழிக்கும் நடவடிக்கையில் பெரும்பான்மை இன அரசு ஈடுபட்டுள்ளது.

ஆகவே உடனடியாகத் தலையிட்டுத் தமிழரைக் காப்பாற்றுங்கள்.

இலங்கைத் தமிழரின் உணர்வுகளை இந்திய தேசபக்தர்கள் புறக்கணித்துவிட்டனர் என்றநிலை ஏற்படக் கூடாது.

இப்படி பிரதமர் காந்திக்கு அனுப்பப்பட்ட அவசர வேண்டுகோளில் அமெரிக்காவில் தமிழர் நலன் மனித உரிமைக் கமிட்டி கூறியுள்ளது.



பொய்யாமொழி

குறள்:

எண்பொருள வாகச் செலச் சொல்லித்தாங் பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு.

பொருள்:

ஒரு செய்தியை மனிதர்கள் ஏற்கும்படி சொல்லுதல் வேண்டும் பிறர் வாயால் அதன் நுட்பமான பொருளை அறியும் அறிவு தான் அறிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர் திருமுகம்

சங்கரத்தை கி.ஆ.சங்கம்

கடந்த 17.3.87 உதயன் பத்திரிகையில் "இன்றே செய்க அதுவும் நன்றே செய்க" என்று ஆசிரியர் தலையங்கம் பிரசுரமாகியுள்ளது.

தலையங்கம் பொதுவாக இருந்தாலும் அதன் உள்ளடக்கத்தில் சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி அமைந்திருந்தமையை என்னால் அவதானிக்க முடிந்தது

அச்சங்கத்தின் செயலாளர் தொடர்ந்து 15 ஆண்டுகள் இருந்ததாகவும் பலகுற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியதாகவும் அவர் மீது ஒரு ஸ்தாபனத்தில் வழக்கு தொடரப்பட்டதாகவும் காணக் கூடியதாக இருந்தது

கிராம அபிவிருத்திச் சங்கம் என்று கூறும் போது அது அமைத்துள்ள உதவி அரசாங்க அதிபரே அதன் செயற்பாடுகளுக்கு பொறுப்பானவர். இது வரையும் மேற்படி சங்கத்தைப் பற்றியோ செயலாளரைப்பற்றியோ எனக்கு எதுவிதமுறைப்பாடும்கிடைக்கவில்லை.

ஆனால் பத்திரிகையில் இச்சங்கம் குறித்து முன்னர் வந்த செய்திகளையும் அறிந்து மிகவும் கவலையும் ஆச்சரியமும் அடைந்தேன்.

இச் சங்கம் 1984ஆம் ஆண்டு யூன் மாதத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டு மீளப் பதிவு செய்யப்பட்டது. சங்க நிர்வாகிகளை தேர்வு செய்வது பொது மக்களுடைய உரிமையாகும். ஆகவே எந்த ஒரு உத்தியோகத்தரும் மீண்டும் தெரிவு செய்யப்பட்டால் அது பொது மக்களின் நம்பிக்கையையே எதிரொலிக்கும் எனது பிரிவில் இயங்கும் நிறையான சங்கங்களுள் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

ஆகவே உதவி அரசாங்க அதிபர் என்ற முறையில், எனது பிரிவுக்குட்பட்டு அமைந்திருக்கும் சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மீதுள்ள முறைப்பாடுகள் தவறெனக் கூற விரும்புகிறேன்.

து.வைத்திலிங்கம்,
உதவி அரசாங்க அதிபர்.

மலை நுதிகளில்

அபிஷேக ஆராதனை

மாவிப்பாய் சோதி வேம்படி ஒழுங்கை ஸ்ரீகாளி அம்மன் கோவிலில் இம்மாதம் 13ஆம் திகதி பகல் விசேஷ அபிஷேக ஆராதனை, வருடாந்த குளிர்த்தி பூஜை நடைபெறும்.

அன்றைய தினம் 6 மணிக்கு 'திருவிளக்குப்பூஜை' நடைபெறும். (இ)

பொங்கல் பூஜை விழா

யாழ்ப்பாணம், ஏப். 1

உடுவில் மகாவித்தியாலய சுவாமி - ஞானவைரவசுவாமி கோவிலில் இம்மாதம் 7ஆம் திகதி மாலை 4-30 மணிக்கு வருடாந்தமடை, பொங்கல் பூஜை விழா இடம்பெறும்.

பின்னர் இரவு 7 மணிக்கு முதலாவது திருவிளக்குப் பூஜை நடைபெறும். (இ-எ)

Express Institute Irupalai, Kopay.
A/L 89
தாவரவியல் - திரு. பாலா
புதன், வியாழன் 6-15 a. m.
விலங்கியல் - திரு ஞானி
வெள்ளி பி ப 3-00
இரசாயனவியல் - திரு. நிலா
செவ்வாய், ஞாயிறு 6-15 a m.
பௌதிகவியல் - திரு. சோதி
புதன் 3-00 p. m வெள்ளி 6-15 a m.
தூய - பிரயோக கணிதம் - திரு. வெங்கட்
சனி, ஞாயிறு 3-30 p m (1169)

உதயன்

02. 04. 1987 வியாழக்கிழமை

Express Institute
Irupalai — Kopay
O/L DAY CLASS
அடுத்த புதிய பிரிவு
இணையற்ற சேவையில்.....
ஏப்ரல் 6 இல்
ஆரம்பம்
நேரம் காலை 8-00 பி. ப 1-00 மணி
(1169)

குடாநாட்டினுள் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு நிவாரண உதவி

தனியார் ஸ்தாபனங்கள் மூலம் வழங்க அதிகாரி ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 2

இராணுவ அச்சுறுத்தலினால் தங்கள் காரணமாக யாழ் குடாநாட்டிற்குள் இடம் பெயர்ந்துள்ள உள்ளூர் அகதிகளுக்கு தனிப்பட்ட ஸ்தாபனங்கள் மூலம் நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு யாழ் செயலக புனர்வாழ்வு இணைப்பு அதிகாரி தெரிவித்தார்.

யுத்த முனைமைச் சுற்றியுள்ள பகுதிகளான வயாவிளான், கட்டுவன், அரும்பனிட்டி, வறுத்தலைவிளான், மயிலிட்டிப்பகுதிகளிலிருந்தே பெரும்பெரும் எண்ணிக்கையானோர் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர்.

தர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் அதிக எண்ணிக்கையான அகதிகள் தங்கியுள்ளனர்.

கட்டுவன், தெல்லிப்பளை பகுதிகளில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்த 750 குடும்பங்களுக்கு மார்ச் மாதத்தில் முதல் இரு வாரங்களுக்கான நிவாரண உணவுகளை அரசு வழங்கியிருந்தது

இந்த நிவாரண உதவியை மேலும் இரு வாரங்களுக்கு நீடிக்க புனர்வாழ்வு அமைச்சு அனுமதி அளித்துள்ளது. -இவ்வாறு யாழ் செயலக புனர்வாழ்வு இணைப்பு அதிகாரி தெரிவித்தார். (உ-எ)

ஊர்காவல் படைக்கு மேலும் 2 ஆயிரம் பேர்

கொழும்பு, ஏப். 2

ஊர்காவல் படைக்கு மேலும் இரண்டாயிரம் பேர் இவ்வருட இறுதிக்குள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர். ஊர்காவல் படைக்குப் பொறுப்பான பொலீஸ் அதிபர் திரு கமிதிலியனே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எல்லைகளில் உள்ள சிங்கள கிராமங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலீஸ் அதிபர் கமித் லியனகே மேலும் தெரிவித்தார். (உ ஐ-எ)

கிளிநொச்சியில் பாடசாலை அதிபர்களுடன் இணைப்பதிகாரி சந்திப்பு

கிளிநொச்சி, ஏப் 2

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிலுள்ள கொத்தணிப் பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோரை கடந்த 16 ஆம் திகதி கிளிநொச்சி இராணுவ இணைப்பதிகாரி கேர்னல் லுதுகோர சந்தித்துஉரையாடினார்.

உரையாடலின் போது பாடசாலை ஆசிரியர்கள் விவரம், உயர்வகுப்பு மாணவர்களது வரவு பாடசாலைகளை இயங்க, வைப்பதில் உள்ள குறைபாடுகள் என்பன பற்றி ஆராயப்பட்டதுடன் கொத்தணி அதிபர்களது பெயர் விவரமும் சேகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது- (உ-76)

மாபியா மாணி காடையர்கள் கொழும்பில்கைது

கொழும்பு ஏப். 2

நாரஹென்பிட்டியில் இடம்பெற்று வந்த மாபியாமணியிலான கொலை, கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாக மதியமூன்று பேரைப் பொலீஸார் கைதுசெய்தனர்.

பல கொலைகள், கொள்ளைகளுக்கு இவர்கள் பொறுப்பாக இருந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

பயங்கர ஆயுதங்கள் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன என்றும் அறிவிக்கப்பட்டது (உ-ஐ-எ)

பஸ் தீக்கிரை

கொழும்பு, ஏப் 2

முதூர்த் தொகுதியில் பச்சநூர்த் கிராமத்தில் இ. போ. ச. ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன,

பஸ் வழிமறிக்கப்பட்டது. பயணிகள் இறக்கப்பட்டு அவர்களின் உடைமைகள் கொள்ளை இடப்பட்டன. பின்னர் பஸ் தீக்கிரையாக்கப்பட்டது. இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

கொள்ளைகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஏப் 1

இருபாலைப் பகுதியில் கடந்த வாரம் மட்டும் மூன்று கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த திங்கட்கிழமை இரவு ஒரு மணி அளவில் இருபாலை பழைய விதியில் உள்ள க அருளானந்தம் என்பவரின் வீட்டினுள் நுழைந்த கொள்ளையர் அங்கு ரொக்கப் பணத்தினைக் கொள்ளையடித்தனர்.

திங்கட்கிழமை இருபாலைச் சந்தியிலுள்ள வீடு ஒன்றில் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் பல பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

மற்றொரு வீட்டில் கொள்ளையிட முயன்றவர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபொது மக்கள் சிலர் கொள்ளையர்களினால் தாக்கப்பட்டனர். (உ-10)

சீனி விநியோகம் தனியாரிடம்

யாழ்ப்பாணம், ஏப். 2

உணவுத் திணைக்களத்தில் கையிருப்பில் இருந்த சீனி முடிந்து விட்டது

இவ்வாறு யாழ் செயலக உணவுத் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் உணவுத் திணைக்களம் பல நோக்கங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தனியார் வியாபாரிகளுக்கு சீனியை விநியோகித்து வந்தது

இம்மாதம் முதல் சீனி விநியோகம் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-எ)

லெப்டினன்டும் மரணம்

கொழும்பு, ஏப். 2

கடந்த 26 ஆம் திகதி பலாலியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்ட ஆயுதப்படையினரில் கெமுனு படைப்பிரிவின் முதலாவது பட்டாலியனைச் சேர்ந்த இரண்டாவது லெப்டினன்ட் செரசுந்தர என்பவரும் அடங்குகிறார்.

இத்தாக்குதலில் படுகாயமடைந்த 7 சிப்பாய்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன, (உ-ஐ-எ)

அன்னையர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஏப். 1

யாழ் செயலக முன்றலில் நாளை வெள்ளிக் கிழமை நடைபெறவிருக்கும் சர்வமத பிரார்த்தனை நிகழ்ச்சியில் சகல வரையும் கலந்து கொள்ளுமாறு அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்து உள்ளது

யாழ் ஆஸ்பத்திரி மீது கடந்த திங்கள் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலைக் கண்டித்தும் அன்னையர் முன்னணி அறிக்கை ஒன்றை வெளியிட்டு உள்ளது (உ-எ)

கிராமவாசிகளைத் தேடி வேட்டை

கொழும்பு, ஏப் 2

சேருநுவரக் கிராமத்தாக்குதலைத்தொடர்ந்து காணாமற்போன ஆறு சிங்களக் கிராமவாசிகளைத் தேடும் பணியில் ஆயுதப்படையினர் ஈடுபட்டுள்ளனர்

இத்தாக்குதலில் 26 பேர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே

இதனிடையே சேருநுவர, ஹொரவப்பொத்தானைப் பகுதிகளில் இரண்டு ஆயுதப்படை முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. (உ-ஐ-எ)

செயலக - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மும் ஏனைய பொதுஸ்தாபனங்களும் மத நிறுவனங்களும் இணைந்து பிரார்த்தனை வாரத்தை நடத்துகின்றன

சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மாஅப்பாக்குட்டி, வண ஜெயசீலன் அடிகளார், மௌலவி எம். சதக்கத்துல்லா (மேனி இராம்), வண சர்வானந்தா அடிகளார், சகி. சகோதரி சோபியா, நல்லூர் ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், வண கோவிந்தராஜ் அடிகள் ஆகியோர் சர்வமதப் பிரார்த்தனையில் கலந்து கொள்வர்.

மனித உரிமைகளை நிலைபெறச் செய்வது, நிரந்தரமானதும் நீதியானதுமான சமாதானத்தை நிலவச்செய்வது, கௌரவமும் சுதந்திரமான மான பிட்ச வாழ்வை ஏற்படுத்துவதற்காக முயற்சிப்பது இவையற்றுக்கான ஆண்மீக பலத்தை வேண்டி நடைபெறும்இப்பிரார்த்தனையில் அனைவரும் பங்கு பற்ற வேண்டும் என்று மனித உரிமைகளுக்கான வெகுஜன இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (உ-எ)

தமிழரை...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

புறக்கணிக்க மாட்டார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் தான் யாழ்ப்பாண குடாநாடு இன்னும் உள்ளது ஆகவே தாக்குதலைச் சமாளிக்கும் திட்டம் போராளிகளிடம் இல்லை. இதனால் பின்வாங்கவும் நேரிடுகிறது சொல்லாயுத்தத்தில் பின்வாங்குதல் தற்காலிகமானது; முன்னேறுதல் நிரந்தரமானது

முடிந்தளவு ஈரோஸ், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இராணுவ ரீதியில் உதவுகின்றது. தமிழரை காப்பாற்றுவது ஈரோஸின் கடமை. அதனைத் தான் உதவுகின்றது- -இப்படி திரு. பாலகுமார் சொன்னார். (உ-எ)

யாழ் மாவட்ட...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

லாம்.

இம் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மூன்று மாதச் சம்பளம் இடைக்கால நிவாரணமாகக் கிடைக்கும். இத் தொகைக்கு வட்டி அறவிடப்படமாட்டாது.

பொதுச் செயலாளர் திரு. ஸ்ரீரங்கேஸ்வரன் [illegible] விவரங்கள் தெரிவிக்கப்பட்டு உள்ளன (உ-எ)

பெண்கள் ராணுவம் தனியாக இயங்கும்

கொழும்பு ஏப். 2

இலங்கை இராணுவத்தில் பெண்கள் பிரிவு இனித் தனியாக இயங்கும்.

பெண்கள் இராணுவத்தைத் தனியாக நிர்வகிப்பதற்குத் தேவையான சட்டம் மூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

இது சம்பந்தமான ஜனாதிபதியின் பொர்க்கை நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இப்போது ராணுவத்தின் ஒரு பகுதியாகவே பெண்கள் பிரிவு இயங்கி வந்தது. (உ-எ)

சென்ரல்-சென்ஜோன்ஸ் கிரிக்கெட் மோதல் ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப் 1

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் செங்கை (மத்திய) கல்லூரிக்கும் இடையில் நடைபெற இருந்த கிரிக்கெட் ஆட்டம் ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

இந்த ஆட்டம் நாளையும், நாளை மறுதினமும் வல்லுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் "பிக்நெக்" மைதானத்தில் நடைபெறுவதாக இருந்தது

இந்தத் தவணை இந்த ஆட்டம் நடைபெறுமா எனத் தற்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி இரு கல்லூரி அணிகளுக்கும் இடையிலான வடக்கின் மிகப் பெரிய கிரிக்கெட் ஆட்டம் கடந்த சில வருடங்களாக நடைபெறுமல் இருந்து வருவது குறிப்பிடத்தக்கது

இதேவேளை யாழ். இந்து- கல்லூரியும் கடந்த தவரோதயா கிரிக்கெட் அணிகளுக்கு இடையில் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்ட கிரிக்கெட் ஆட்டமும் தற்போது நடைபெறுமா எனத் தெரியவருகிறது. (உ-7)

இன்று மோதல்

டுபாய், ஏப் 2

நான்கு நாடுகள் பங்கு பற்றும் ஒருநாள் மட்டுப்படுத்தப்பட்ட ஒவர் கிரிக்கெட் போட்டிகள் இன்று ஷார்ஜாவில் ஆரம்பமாகின்றது.

இன்று வியாழன் இந்தியா அணியும் இங்கிலாந்து அணியும் மோதுகின்றன.

இந்தியா, இங்கிலாந்து பாகிஸ்தான், ஆஸ்ரேலியா ஆகிய நாடுகள் இச் சற்றுப் போட்டியில் பங்குபற்றுகின்றன. (உ-எ)

பிரசைகள்குழு கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 1

வயாவிளான் பிரசைகள் குழு வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை 4 ஆம் திகதி கந்தரமடம் பாடசாலைக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது

இக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர் தெரிவும், பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் பற்றிய ஆய்வும் இடம் பெறும். (உ-எ)

காங்கேசனில் - -

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வில் மனநோயாளி ஒருவர் கொல்லப்பட்டார். மூன்று பொதுமக்கள் காயமடைந்தனர்.

நேற்றுக் காலை 7 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்தும், காங்கேசன்துறை ஹாபர் விமான ஹோட்டல் முகாமிலிருந்தும் காங்கேசன்துறையை நோக்கி பல நூற்றுக்கணக்கான சிப்பாய்கள் கனரகவாகனங்கள், கவச வண்டிகள் சகிதம் நடைபவனியாக வந்தனர்.

இவர்களுக்குப் பாதுகாப்பாக வந்த இரண்டு ஹெலிகொப்டர்கள் பறந்தவாறு 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டன.

ஊறணியிலும், காங்கேசன்துறையிலும் படையினரை இருமுனைகளில் எதிர் கொண்டு போராளிகள் நேரடித் தாக்குதல் நிகழ்த்தினர்.

இச்சம்பவத்தில் போது மயிலிட்டி, ஊறணி, காங்கேசன்துறைப் பகுதி கரையோரங்களில் ஏற்கனவே நிலைகொண்டிருந்த கப்பல்களில் இருந்து காங்கேசன்துறையின் தெற்குப் பகுதியை நோக்கி குண்டுகள் ஏவப்பட்டன.

அதன் பின்னர் இராணுவத்தினர் காலை 10 மணியளவில் காங்கேசன்துறை நடேசுவராக் கல்லூரிவரை முன்னேறினர்.

கல்லூரியில் மேல் மாடியிலும் கல்லூரி வீதியிலும், கல்லூரி வீதி யாழ்ப்பாணம் பிரதான வீதியுடன் இணையும் சந்தியில்முன்பாகவுள்ள இடத்திலும் நிற்பவாறு இராணுவத்தினர் தெற்குப் பகுதியை நோக்கித் தாக்குதல் நிகழ்த்தினர்.

அப்பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் முன்னுள்ள கட்டடச் சுவரில் பின்னால் நின்றபடி இராணுவத்துடன் எதிர்ச்சமர் புரிந்த மயூரன் மீது இராணுவம் சினைப்பர் தாக்குதல் நடத்தியதில் அவர் தலையில் குடுபட்டு மரணமானார்

மயூரனின் துணிகரத் தாக்குதலினாலேயே இரண்டு இராணுவத்தினர் இறந்ததாகக் கூறப்படுகிறது.

ஆலயம் மேலும் சேதம்

இச்சம் பவங்களின் போது மூர்க்கத்தனமாக ஹெலி மேற்கொண்ட 50 கலிபர் தாக்குதலால் மாவிட்டபுரம் ஆலயம் உட்பட ஏழு வீடுகள் சேதமடைந்தன.

வீதிகள் குழிவாகக் காட்சியளிக்கின்றன.

(பிற்பகல் 4 மணியளவில் கல்லூரி வீதியால் வந்தமனநோயாளியான தேவராசா நகுலேஸ்வரன் (34 வயது) இராணுவத்தால் சுடப்பட்டு அவ்விடத்திலேயே மரணமடைந்தார் (உ-119)

தாக்குதலை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

இல்லை.

ஆனால் இலங்கை அரசோ தனது சொந்தப் பகுதியான யாழ். குடா மீது குண்டுத் தாக்குதல்களை நடத்துகின்றது.

இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

நிறைவில் உள்ள சுமார் மூவாயிரம் தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

-இப்படி அந்தியில் கோரப்பட்டுள்ளது (உ-எ)

பயணிகளை...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பின்னர் – நேற்று இரவு 10 மணி அளவிலேயே – யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தன.

ஒரு மாதங்களுக்கு முன்னர் இதே போன்று படையினர் வடக்கு நோக்கி நகர்ந்தனர் என்பது தெரிந்ததே. (உ-10)

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987
உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜோ விஸ்ராஸ் னியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் _____
கல்லூரி _____
வாக்காளர் பெயர் _____
விலாசம் _____
ஒப்பம் _____

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மிஷனரி நிலைய வீதி, இருபாலை ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் அச்சகத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 02 - 04 1987 தொலைபேசி இல. 24805, 22075

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at th General Post Office. Under Number QJ / 94 /N /87. Telephone, 24805, 22075

யாழ் செயலகத்தில் ஓய்வூதியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஏப். 1

கச்சேரி இலக்கை வங்கி ஓய்வூதியக்காரர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய ஓய்வூதியக் காசோலைகள் யாழ் செயலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

இம்மாதம் 6 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை யாழ் செயலகத்துக்குச் சென்று இக் காசோலைகளைப்பெற்றுக் கொள்ளலாம்.

தேசிய அடையாள அட்டை, ஓய்வூதிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் வங்கிக் கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், ஓய்வூதியகாரர் பெயர் ஓய்வூதிய இலக்கம் ஆகியன குறித்து எழுதப்பட்ட கடிதத்தை தவறாது சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை நகரக் நிலையங்கள் மூலமும் அதன் கீழ் இயங்கும் உப தபால் நிலையங்கள் மூலமும் ஓய்வூதியம் பெறுபவர்களும் தமது ஏப்ரல் மாத ஓய்வூதியப் பணத்தை இதே முறைப்படி கடிதத்தையும் ஆவணங்களையும் நேரடியாகச் சமர்ப்பித்து கச்சேரியிலேயே தமது காசோலைகளை இம் மாதம் 6 ஆம் திகதி பெற்றுக் கொள்ளலாம்.

மேற்படி குறிக்கப்பட்ட திகதிகளில் தமது ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளத் தவறும் ஓய்வூதியக்காரர்கள் இம் மாதம் 20 ஆம் திகதிக்கு பின்னர் தாம் யாழ் செயலகத்தில் தமது ஓய்வூதியத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்விவரங்கள் யாழ் செயலக உதவி அரச அதிபர் திரு. த. ஞானசேகரம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளன (உ-எ)

உப்புவெளியில் கலாட்டா:

4 ஊர்காவலர் கைது; துப்பாக்கிகளும் பறிமுதல்

திருகோணமலை, ஏப். 1

உப்புவெளி இராணுவப் பகுதியில் உள்ள பல்லிவாசலுக்குள் இரவு நேரத்தில் புகுந்து தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக நான்கு சிங்கள ஊர்காவல் படையினர் கைதுசெய்யப்பட்டனர்.

அவர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கடந்த 31ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

இரவு 9 மணியளவில் ஆயுதந் தரித்த கோஷ்டி ஒன்று ஜமாலியாப் பள்ளிவாசலுக்குள் புகுந்து அங்கு இருந்தவர்களைத் தாக்கத் தொடங்கியது.

பள்ளிவாசலுக்குரிய உடைமைகளையும் சேதப்படுத்தியது.

அருகில் உள்ள சிறிமாவோபுரப் பகுதி ஊர்காவல் படையினரிடம் சிலரே மதுபோதையில் இச்செயலில் ஈடுபட்டனர் என்று தெரியவந்தது

அச்சமயம் அவர்கள் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொண்டனராம் உயிரிழப்பு எதுவும் இடம் பெறவில்லை.

மறுநாள் காலை முஸ்லிம் மக்களின் தூதுக் கோஷ்டி ஒன்று திருகோணமலை அரசாதிபர், இராணுவ இணைப்பு அதிகாரி ஆகியோரைச் சந்தித்து முறையிட்டது.

முஸ்லிம்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்திய இச்செயல் குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதிபளித்தனர். (உ-எ-150)

இணை அமைச்சர்கள் ஏனைய அமைப்புகளை சந்திக்காதது ஏன்?

சென்னை, ஏப் 1

பிரதமர் ராஜீவ் காந்தியுடன் சென்னை வந்த இணை அமைச்சர்கள் குழு ஏனைய தமிழ்ப் போராளி அமைப்புக்களை சந்திக்காதது ஏன்?

சென்னை நகரில் ஏனைய இயக்கங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் அப்போது இல்லாமல் இருந்ததே இதற்குக் காரணம்.

இப்படி 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' செய்தி தெரிவித்தது.

இணையமைச்சர்கள் ப. சிதம்பரமும், நட்வர்சிங்கும் தமிழீழ விடுதலைப் புலிகள், ஈரோஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவற்றின் தலைவர்களை மட்டுமே சந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-ஐ-எ)

ஏ. எஸ். பியாக பதவியுயர்வு

கொழும்பு, ஏப். 2

நேற்று முதல் பதினேழு பொலீஸ் இன்ஸ்பெக்டர்கள் உதவி பொலீஸ் அதிபர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்.

இவர்களில் இரண்டு பேர் தமிழர் திரு எஸ். பத்மநாதன், திரு. ஆர். செல்வகுமார் ஆகியோரே அந்த இருவருமாவர். (உ-ஐ-எ)